**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22 ஆம் நாள் புதன்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No.255/2015** வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | வீரப்பெருமாள் | **வயது** | : | 73 |
| **த.பெ** | : | ராமசாமி | **தாலுக்கா** | : | போளூர் |
| **கிராமம்** | : | மொடையூர் | **தொழில்** | : | விவசாயம் |

**<u>22.10.2025 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1) நான் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பிரதிவாதி என் வீட்டை ஆக்கிரமித்து விட்டதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள தாவா விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேலும் நான் தாக்கல் செய்துள்ள முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். பிரதிவாதி என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதியின் அப்பா பெயர் பூமாலை நைனார் ஆகும். பிரதிவாதி தற்போது குடியிருக்கும் வீட்டை அவர் தந்தை 1947 ல் கிரையம் பெற்றார் என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரையம் வாங்கும்போது அந்த வீடு கூரைவீடு என்று சொன்னால் சரிதான்.

2) என் தந்தை அ அட்டவணை சொத்தை 1950 வா.சா.ஆ-1 முன்னிலைக்கு கிரையம் பெற்றார் என்றால் சரிதான். **வா.சா.ஆ-1** ஆவணத்தின்படி அ அட்டவணை சொத்து காலிமனையாகத்தான் அப்போது கிரையம் பெற்றார் என்றால் சரிதான். என் தந்தை ராமசாமி நைனாருக்கு 3 மகன்கள் ராமலிங்கம், முனுசாமி, வீரபெருமாள் (வாதி) ஆகும். **வா.சா.ஆ-1** ஆவணத்தின் மூலம் என் தந்தை பெற்ற காலிமனையை யாருக்கு பாகமாக கொடுத்தார் என்றால் எனக்கு கொடுத்தார். என் தந்தை **வா.சா.ஆ-1** ஆவணம் மூலம் அ அட்டவணை சொத்தை எனக்கு என் தந்தை மூலம் எப்படி கிடைக்கபெற்றது என்று சொன்னால் அவர் என்னிடம் **வா.சா.ஆ-1** பத்திரத்தை ஒப்படைத்துவிட்டார். என் தந்தை அ அட்டவணை சொத்தை எனக்கு பத்திரம் மூலம் எழுதிகொடுத்தாரா என்றால் இல்லை, அண்ணன் தம்பிகள் எங்களுக்கிடையே சொத்தை இன்னாருக்கென்று பிரித்துகொண்டோம்.

(எதிர்தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.10.23 15:50:13 +0530

District Munsif,
Polur.